**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 270 /2023**

**Deposition of P.W. 7**

Name : திரு. பாலமுருகன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:18.02.2026

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் நக்சல் சிறப்பு அலுவல் பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் குலசேகரம் காவல் ஆய்வாளராக இருந்தபோது திருவட்டார் காவல்நிலைய பொறுப்பு காவல் ஆய்வாளராக பணியாற்றினேன். அப்போது கடந்த 19.06.2023ம் தேதி திருவட்டார் காவல்நிலைய குற்ற எண்.138/2023 பிரிவுகள் 3(1), 4(2) (c), 5(1) (a) 5(1), (d). ITP Act மற்றும் பிரிவு 370(2) இ.த.ச படியான வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் நகலினை காவல் உதவி ஆய்வாளர் திரு. ரமேஷ் என்பவரிடமிருந்து புலன் விசாரணைக்காக பெற்றுக்கொண்டேன். பின்னர் 16.45 மணிக்கு இந்த வழக்கின் சாட்சிகளான தலைமைக்காவலர் 227 சைலின் ஜெப சுபின், பெண் முதல்நிலை காவலர் திருமதி. ஷீஜா, பெண் முதல்நிலை காவலர்திருமதி. ராகி, சிவகுமார் ஆகியவர்களை காவல்நிலையத்தில் வைத்து தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணையில் இந்த வழக்கின் சம்பவம் உண்மை என தெரிந்தது. பின்னர் இந்த

வழக்கின் சம்பவ இடத்தில் 17.30 மணிக்கு சென்று சாட்சிகள் பிரிட்டோ, ஆர்ஷன் ஆகியவர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தாயார் செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ.6, மாதிரி வரைபடம்அ.சா.ஆ.7. மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காவல்நிலையம் வந்து இந்த வழக்கின் எதிரியான ரவீந்திரன் நாயர் என்பவரை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன். பாதிக்கப்பட்ட பெண்களான சோபா மற்றும் சக்தி பெண்கள் விடுதியாளர் தங்கும் விடுதிக்கு பாதுகாப்பாக அனுப்பி வைத்தேன். திருவட்டார் காவல்நிலையத்திற்கு புதிய ஆய்வாளர் பொறுப்பேற்றபடியால் வழக்கு கோப்பை அவரிடம் ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவ நாளன்று திருவட்டார் காவல்நிலைய பொறுப்பு ஆய்வாளராக பணியில்இருந்தேன் என்றால் சரிதான். அன்றைய தினம் வெளி அலுவல் எதுவும் செல்லவில்லை. உதவி ஆய்வாளர் தான் சோதனை செய்து எதிரியை கைது செய்து, பாதிக்கப்பட்ட பெண்களையும் அழைத்து வந்தார் என்றால் சரிதான். உதவி ஆய்வாளருக்கு சோதனை செய்ய நீதிமன்ற உத்தரவு எதுவும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். நானும் எழுத்து பூர்வமாக உத்தரவு வழங்கவில்லை, வாய்மொழியாக உத்தரவு கொடுத்தேன். பொதுவாக, சட்ட படி எழுத்து பூர்வ உத்தரவை எதிரிக்கு காண்பித்து படித்து காட்டி செயல்படுத்த வேண்டுமென்றால் சரியல்ல. ஆய்வாளர் படிநிலைக்கு குறைவான அதிகாரிகள் ஐ.டி.பி. சட்ட படி சோதனை மேற்கொள்ள அதிகாரமில்லை என்றால் சரியல்ல. சட்டபடி சம்பவ இடத்தில் வசித்து வரும் மதிப்புமிக்க இருநபர்கள் முன்னிலையில் சோதனை செய்யப்பட வேண்டுமென்றால் அவசியமில்லை. அத்தாட்சியில் பொது மக்கள் கையொப்பம் செய்ய முன்வரவில்லை என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. பொது மக்கள் காவல்துறையினருக்கு வழக்கு விசாரணையில் தகுந்த உதவிகள் வழங்கவில்லை என்றால் அவர்கள் மீது இந்தியன் தண்டனை சட்ட படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றால் சரிதான். இவ்வழக்கில் பொது மக்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எதிரி பாலியல் தொழிலுக்கு ஆண்களை

அழைத்தார் என்பதற்கு சாட்சிகள் இல்லை. உதவி ஆய்வாளரும், போலீசாரும் சென்ற போது அங்கு ஆண்கள் யாரும் பாலியல் தொழிலில் ஈடுபட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆணுறை பாலியல்தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை. பாலியல் தொழிலில் கிடைத்த பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. சாட்சி சிவகுமார் எதிரி பாலியல் தொழில் நடத்துவதை நேரில் பார்த்ததாக வாக்குமூலம் கொடுக்கவில்லை. பாதிக்கப்பட்ட பெண்களை மருத்துவ சிகிச்சைக்கு அனுப்பவில்லை. பாதிக்கப்பட்ட பெண்கள் என்னிடமோ, நீதித்துறை நடுவரிடமோ வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் என்னிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள், ஆனால் அவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை. என்னிடம் பாதிக்கப்பட்ட பெண்கள் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், பொய்யாக காவல்நிலையத்தில் வைத்து பதிவு செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 270/2023**

**Deposition of P.W.** 8

Name : திருமதி. ஜானகி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: **18.02.2026**

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் தற்போது திருநெல்வேலி மாவட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் சிறப்பு பாதுகாப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது நிலைய குற்ற எண். 138/2023 பிரிவுகள் 3(1), 4(2) (c), 5(1) (a) 5(1), (d). ITP Act மற்றும் பிரிவு 370(2) இ.த.ச படியான வழக்கை முந்தைய காவல் ஆய்வாளர் திரு. பாலமுருகன் அவர்கள் முதல்விசாரணை முடித்து என்னிடம் ஒப்படைத்த வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 29.07.2023ம் தேதி எதிரி பயன்படுத்தியதாக கூறப்படும் கதவு எண் 28/182 வீட்டின் உரிமையாளராக அனிதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து ஒப்பந்த பத்திரம் பெற்றேன். விசாரணையை முடித்து

எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ஒப்பந்த பத்திரத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வழக்கிற்காக ஒப்பந்த பத்திரம் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. குற்ற இறுதிஅறிக்கையில் எதிரி வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி பெண்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியதாக நேரடி சாட்சிகள் கிடையாது என்றால் சரிதான். பாலியல் தொழில் நடந்ததாக கூறும் வீட்டின் அருகே நிறைய வீடுகள் உள்ளது. எதிரியிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. எதிரி பெண்களை வைத்து பாலியல்தொழில் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.